**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 169 / 2021**

Deposition of RW -2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 07.04.2025 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சௌந்தர்யா | Age | : |
| Father's Name | : | | Village | : |
| Calling | : | இளநிலை உதவியாளர் | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் கரூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில்சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னை இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அத்தாட்சி கடிதம் கொடுத்துள்ளார். எனக்கு கொடுக்கப்பட்ட **அத்தாட்சி கடிதம் சா.சா.ஆ.1** ஆகும். பி.சிவபாலாஜி, த/பெ.பல்சல்ராஜ், 82 சி, அம்மையப்பா நகர் மேற்கு நீல கார்டன், பெரியகுளத்துப்பாளையம், கரூர் மாவட்டம் என்ற நபருக்கு எங்கள் அலுவலகம் மூலம் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என்று அழைப்பாணையில் கோரப்பட்டிருந்தது. எங்கள் கணினியின் பதிவின் படி மேற்கண்ட நபருக்கு எங்கள் அலுவலகம் மூலம் ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டதாக பதிவுகள் இல்லை.

**குறுக்கு விசாரணை**

சிவபாலாஜி என்பவருக்கு எங்கள் அலுவலகத்தில் பழகுனர் ஓட்டுநர் வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்து எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் சிவபாலாஜி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ள பழகுனர் உரிமம் நகல் எங்கள் அலுவலகம் மூலம் கொடுக்கப்பட்டதுதான். **அந்த பழகுனர் உரிமம் நகல் ம.சா.ஆ.12** ஆகும். அந்த உரிமம் 27.03.2019 முதல் 26.09.2019 வரை செல்லுபடியாகக்கூடியது என்றால் சரிதான்.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |